மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 263, (குறுக்கீடு) திரு. ப. சிதம்பரம்.*

திரு. ப. சிதம்பரம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையானது அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல, அங்கு எல்.பி.பி. வாய்க்காலினுடைய கழிவுநீர் இருபுறமும் செல்வதால்—அந்தப் பாதை வண்டி வாகனங்கள் செல்வதற்கும் மற்றும் பேருந்துகள் செல்வதற்கும் மிகவும் பழுதடைந்து, மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதால்—மாண்புமிகு அம்மா அவர்களினுடைய பொற்கால ஆட்சியில், இந்த ஆண்டிலேயே இதற்குத் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்து, ஏதாவதொரு வகையில் எனது தொகுதி மக்களைக் காப்பாற்ற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, சாலையினுடைய அவசர அவசியத்தைக் கருதி வரும் நிதியாண்டில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 263, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு நிதி அமைச்சர்.*

263—

வாக்குச்சாவடி.

***18866—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம், குப்பனத்தம் நல்லூரில் வாக்குச்சாவடி அமைக்கப்படாததால், வாக்களிக்க சிரமமாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வாக்குசாவடி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 01-01-2003 ஆம் நாளை, தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல்கள் 17-01-2003 அன்று வெளியிடப்பட்டுள்ளன. வாக்காளர்களின் வசதிக்கேற்ப வாக்குச் சாவடிகளைச் சீரமைப்பது குறித்து தேர்தல் ஆணையத்தினுடைய அறிவுரை பெறப்பட்டவுடன் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை. வினா எண் 264, (குறுக்கீடு) திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல சட்டமன்றத் தொகுதிகளில் 2 கிலோ மீட்டருக்கு மேலாக, 5 கிலோ மீட்டர் அளவுக்குக்கூட நிறைய இடங்களிலே வாக்குச்சாவடிகள் இருக்கின்ற காரணத்தினால், வாக்களிக்க வருபவர்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதைப் பலமுறை தமிழக அரசு தேர்தல் ஆணையத்திடம் எடுத்துக்கூறியும், வாக்குச் சாவடிகள் நீண்ட தூரத்தில் இருப்பவற்றையெல்லாம் மாற்றியமைப்பதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே அதை மனதிலே வைத்து உடனடியாக வருகின்ற பாராளுமன்றத் தேர்தலுக்குள் — இந்த வாக்குச் சாவடிகள், நீண்ட தூரத்தில் இருப்பவற்றையெல்லாம் — எந்தெந்த இடங்களிலே வாக்குச் சாவடிகளை அமைக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் உடனடியாக, தேர்தல் ஆணையம் அமைப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா? அவர்களை வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1,500 வாக்காளர்கள் ஒரு வாக்குச்சாவடிக்கு என்ற முறையிலே அது அமைக்கப்படுகிறது. பல இடங்களில் 2 கிலோ மீட்டர் தொலைவுக்கு மேல் போக வேண்டிய சூழல் இருப்பது உண்மைதான். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தந்த மாவட்டப்

2003 ஏப்ரல் 21]

பகுதிகளில் எங்கெங்கு 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலாக வாக்காளர்கள் நடந்து செல்லவேண்டிய நிலை இருக்கிறதோ அவற்றையெல்லாம் ஆய்ந்து தேர்தல் ஆணையத்திற்கு அனுப்புவதற்காக தயார் செய்யும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அப்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தயார் செய்து அரசுக்குத் தெரிவிக்கின்றபோது அதை உடனடியாக தேர்தல் ஆணையத்திற்கு அறிவித்து தேர்தல் ஆணையத்தின் மூலம் வாக்குச்சாவடிகளை, கூடுதல் வாக்குச்சாவடிகளை, ஏற்கெனவே இருக்கின்ற வாக்குச்சாவடிகளுக்குப் பக்கத்திலேயே அமைப்பதற்கு அரசு தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 264, திரு. மா. ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

264—

ஜெராக்ஸ் நகலிகங்கள்

***5285—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீதிமன்றங்களில் நகலகங்கள் (ஜெராக்ஸ்) ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அனைத்து மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கும் ஜெராக்ஸ் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள அனைத்து சார்பு நீதிமன்றங்களுக்கும் ஜெராக்ஸ் இயந்திரங்கள் வழங்குவதற்கு அரசின் தற்போதைய நிதிநிலை மேம்பட்டதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட